
சிஸ்டம் சரியில்லை போர் ஆதரவும், எதிர்ப்பும் தெரி மேலும், ரஜினிகாந்த் மட்டுமே முடியும் என்றார்.

# கோவையில் ‘ஏர் –ஆம்புலன்ஸ்’ சேவை விமானப் படை தளபதி துவக்கி வைத்தார்



கோவை வட்டமலைபாளையம் கங்கா மருத்துவமனையில், ‘ஏர் ஆம்புலன்ஸ்’ சேவையை விமானப் படை தலைமை தளபதி பிரேந்தர் சிங் தனோவா நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார். அருகில், (இடமிருந்து) கோவை போலீஸ் கமிஷனர் அமல்ராஜ், மேற்கு மண்டல ஐ.ஜி., பாரி, கங்கா மருத்துவமனை இயக்குனர் சண்முகநாதன், நொய்டா வருமான வரித்துறை கமிஷனர் ஸ்ரீவஸ்தவா, கங்கா மருத்துவமனை நிர்வாக இயக்குனர்கள் டாக்டர் ராஜசபாபதி, டாக்டர் ராஜசேகரன் ஆகியோர்.

**கோவை, ஜூன் 26–**

கோவையில் கங்கா மருத்துவமனை சார்பில், ‘ஏர்– ஆம்புலன்ஸ்’ சேவை, நேற்று துவக்கப்பட்டது.

கோவை, துடியலூர் அருகே வட்டமலைபாளையம் கங்கா நர்சிங் கல்லூரி வளாகத்தில், கங்கா மருத்துவமனை சார்பில் ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவை துவக்கவிழா நேற்று நடந்தது. இந்திய விமானப் படை தலைமை தளபதி பிரேந்தர் சிங் தனோவா கொடி அசைத்து, துவக்கி வைத்தார்.

அவர் பேசுகையில், ‘‘கடந்த, 1999ல் கார்கில் போரின்போது, இமயமலையின் பனி படர்ந்த பகுதிகளில் காயமடைந்த வீரர்கள், ஹெலிகாப்டர் வாயிலாக, சண்டிகர் மற்றும் டில்லியில் உள்ள ராணுவ மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டனர். ஆபத்தான நிலையில் உள்ள வீரர்களை காப்பாற்ற, 2007ல், ‘ஏர் டிரான்ஸ்போர்ட்’ திட்டத்தை, விமானப் படை உருவாக்கியது. தற்போது, 17க்கும் மேற்பட்ட ஹெலிகாப்டர்கள், ஏர்–ஆம்புலன்ஸ்களாக மாற்றப்பட்டு, வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன,’’ என்றார்.

நாட்டில் முதல் முறையாக இச்சேவை, கோவை கங்கா மருத்துவமனையில் துவக்கப்பட்டதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. இத்தாலியில் தயாரிக்கப்பட்ட, இந்த ஹெலிகாப்டரில் அவசர மருத்துவ உதவிக்கான அனைத்து மருத்துவ வசதிகளும் தயார் நிலையில் உள்ளன.

இரு பைலட்கள், ஒரு டாக்டர், ஒரு உதவியாளர் பணியில் இருப்பர். ஹெலிகாப்டர், 500 கி.மீ., வரை சென்று, வர அனுமதிக்கப்பட்டுள்ளது.

விழாவில், விமானப் படை, மருத்துவ சேவை பிரிவின் தலைமை இயக்குனர் (ஓய்வு) அனில் பெல், போலீஸ் கமிஷனர் அமல்ராஜ், ஐ.ஜி., பாரி, கங்கா மருத்துவமனை இயக்குனர்கள் ராஜசபாபதி, ராஜசேகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.